# 50

# பொன்விழா இதழ்




372.6
றோமன்
SLIPR

## மே/ஜய/இராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம்

# பாடசாலை இலச்சினை

**R. C. T. M**
**VIDYALAYAM**

றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம், இராஜகிரிய

கற்று உணர்

**RAJAGIRIYA**

# அகவை ஐம்பதின் ஆண்டு விழா

# 1957 - 2007

**விருது வாக்கியம்**

## "கற்று உணர்"

**குறிக்கோள்**

*பொருளாதாரத்தில் நலிவுற்ற சமுதாயத்திலிருந்து கல்வி பயில வரும் மாணவர்களை இன, மத, வர்க்கப் பாகுபாடின்றி அறிவூட்டி ஆளுமையிலும் ஆக்கத் திறமையிலும் சமூகத்திற்குப் பொருத்தப்பாடுள்ள சிறந்த நற்பிரஜைகளை ஆக்குதல்.*

மே/ஜய/இராஜகிரிய றோ.க.த.வித்தியாலயம்
இராஜகிரிய

# சமர்ப்பணம்

ஐம்பது ஆண்டுகளாக
இராஜகிரிய றோமன் கத்தோலிக்க
தமிழ்க் கலவன் வித்தியாலயம்,
கோட்டைப் பிரதேசச் சூழலில் உள்ள
தமிழ் பேசும் கத்தோலிக்க, கிறிஸ்தவ,
இந்து, இஸ்லாம் மக்களுக்கு எண்,
எழுத்தறிவோடு கூடிய சமூக
விழுமியங்களை ஊட்டி இற்றைவரை
அயராது தன் பணியில் தொடர்கின்றது.
இப்புனித பயணத்தை
தொடர்த்தேர்ச்சியாகச்
செயற்படுத்துவதற்குத் தளராது
உறுபணி ஆற்றிய, ஆற்றுகின்ற
அனைவருக்கும் இம்மலர்
சமர்ப்பணம்





# பொன்விழா வாழ்த்து

கோட்டைப் பிரதேசத்தில் ஒளிரும் ஒரேயொரு தமிழ் மொழிமூல றோமன் கத்தோலிக்க கலவன் வித்தியாலயம் நடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தன்னை நாடிவந்த சேவை நாடிகள் அனைவருக்கும் உள்ளார்த்தமாக உயர் நிலையில் சிறந்த பலபணிகளை புரிந்து வரும் சேவைக்காய்.....

அன்னையே
நீ வாழ்க!
நின் பணி வாழ்க!
உனது பணி இப்பிரதேசத்தில் உலகம்
உள்ளவரை தொடர வேண்டுமென்று
அன்பாக வாழ்த்துகின்றோம்
அமலனை வேண்டுகின்றோம்

*மே/ஜய/இரா/ றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலய*
*அதிபர், ஆசிரியர், மாணவர்,*
*பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள்*

# பொன் விழா கீதம்

*கல்வியில் ஒளிரும் சோலையிது*
*கலைகள் மிளிரும் கூடமிது*
*உண்மையும் நேர்மையும் ஓங்கிடவே*
*உழைப்போம் என்றும் ஓய்வின்றி*

*பண்பு நிறைமிகு அதிபர்கள்*
*பயனறி வூட்டிடும் ஆசான்கள்*
*பணிவுடன் ஒழுகிடும் மாணவர்கள்*
*பலரையும் தருமிடம் இச்சோலை*

*இராஜ கிரியாவின் மத்தியிலே*
*இன்பத் தமிழில் போதிக்கும்*
*இறையருள் கொண்டநம் எழிற்சோலை*
*இரோமன் கத்தோலிக்க பாடசாலை*

*இறைவா உன்னை வேண்டுகிறோம்*
*இன்னும் பல்லாண்டுகள் வாழ்வதற்கு*
*மறவா நன்றியை நவில்கின்றோம்*
*இறவாப் பணிகள் புரிந்தோர்க்கு*

R. C. T. M
VIDYALAYAM

RAJAGIRIYA

# பாடசாலைக் கீதம்


இறைவனைப் புகழ்ந்திடுவோம்
இசையினை மீட்டிடுவோம்
இளமையின் இருளினை இதமுடன் போக்க
இறையொளி வேண்டிடுவோம்

அமிழ்தினுமினிய நம் தமிழ் மொழி சிறக்க
அமைந்துள்ள நம் கல்விக் கூடமே சிறக்க
இனமத பேதம் இதயத்தில் அகற்றி
இருகரம் கூப்பி இணைந்து செல்வோம்

குன்றின் மேலிட்ட தீபமெனவே
என்றும் எம் வாழ்வில் ஒளியைப் பரப்பி
சென்று நாம் வாழ செவ்விய கலைகள்
இன்றும் என்றும் கசடறக் கற்போம்

இராஜகிரியாவின் மகுடமெனத்திகழும்
உரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலைக் கழகம்
அரும்பணியாற்றி அழியாது செழிக்க
சிரவணத்துடனே சிறுவர் நாம் உழைப்போம்.

# மேல் மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளரது ஆசிச்செய்தி



ஸ்ரீ ஜெயவர்தனபுர கல்விவலயத்தில் அமைந்துள்ள இராஜகிரிய றோ.க.த கலவன் பாடசாலை தனது பொன் விழாவைக் கொண்டாடுவதையிட்டு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

இப்பாடசாலை 1957 மாசி மாதம் 80 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று மாணவர்களது தொகை 275 வரை அதிகரித்துள்ளமை இப்பாடசாலையின் வளர்ச்சியையும் ஆசிரியர்கள் அதிபர்கள் மிகச் சிரத்தையுடன் பணியாற்றியமையையும் வெளிப்படுத்துகின்றது.

பாடசாலையில் கோட்டே, கிருலப்பனை, நாரஹேன்பிட்டிய, கடுவளை, இராஜகிரிய பகுதியைச் சேர்ந்த வசதி குறைந்த மாணவர்களே கற்கின்றார்கள். அவர்களிற் பலர் உயரிய சித்தியை க.பொ.த. சாதாரண தரத்தில் பெற்று கொழும்பு இராமநாதன் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பைத் தொடர்வது இம்மாணவர்களின் திறமையைப் பறைசாற்றுகின்றது. தற்போதைய அதிபர் அருட்சகோதரி. ஜசிந்தா அவர்கள் ஆசிரியர்கள் அனைவரது ஒத்துழைப்பைப் பெற்றும், பெற்றோரதும், நலன் விரும்பிகளதும் உதவியைப் பெற்றும் பாடசாலையைத் திறம்பட நடத்தி வருகின்றார்.

இடநெருக்கடி மத்தியிலும், விஞ்ஞான கூடம், கணினி அறை, நூலக அறை என்பனவற்றை அமைத்து மாணவர்களது திறனை வளர்க்க உதவுகின்றார். பாடசாலை வளவு பயன்தரு தாவரங்கள், பூ மரங்கள் வளர்க்கப்பட்டு அழகாக அமைந்துள்ளது.

வருடந்தோறும் தமிழ்மொழித் தினம், விஞ்ஞான தினம், கலை விழா, ஒளி விழா என சிறப்புறுகின்றது.

இவ்வசதி வாய்ப்புக்களை மாணவர்களுக்கு அமைத்து அவர்கள் உயர்ச்சிக்கு உழைக்கும் ஆசிரியர்கள், அதிபரையும், பாராட்டி மாணவர்கள் சகல துறைகளிலும் உயர்வுற வாழ்த்துகிறேன்.

**M.S.A.M. முகுதார்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
மேல் மாகாணம்

# MESSAGE FROM THE ZONAL DIRECTOR OF EDUCATION



It is a great pleasure to contribute a message to the souvenir published by the Rajagiriya Roman Catholic Tamil Mixed Vidyalaya on the occassion of their Golden Jubilee.

This school started in the year 1957 and being one of the oldest school in the Kotte area renders great service to the students from Kotte, Kirulopone and Kaduwela area.

Looking back on the origin, growth and progress of this Vidyalaya, its has achieved a great success with the untiring efforts of the past principals, Rev. Sisters teachers and well wishers.

I appreciate the enthusiasm and the dedication of the present principal Rev. Sister Jacintha Mary Fernando towards the development of this school. I hope this school will achieve a great development under her guidence and lesdership.

I take this opportunity to convey my best wishes to the principal, staff and the students of this school on the occasion of the Golden Jubilee.

Also I wish them every success in the efforts taken by them for the development of the school.

**Mrs. Padma Kannagara**
Zonal Director of Education
Sri Jayawardanapura

## MESSAGE FROM THE DIVISIONAL DIRECTOR OF EDUCATION

I am happy to write this message to the souvnier for the occasion of the Golden Jubilee of Rajagiriya Roman Catholic Tamil Mixed Vidyalayam.

This school was started by the Catholic Church in 1957 specially by the parish Priests of Rajagiriya for the Tamil speaking children of Kotte, Kirilopone and Kaduwela area children from Catholic, Christian, Hindu and Islam families come to this school. Most of them are very poor as the rich children of these area go to big schools in the city of Colombo.

This school originally belonged to sisters of the Holy Family and the sister have worked very hard to give good and all round human formation and a good education to these poor and marginalised children who attend this school.

We must be very grateful to the nuns who uplifted the school to the present day standard by dedicating their energy and even sacrificing their lives to develop the school.

The Parent Teachers Association and the well wishers who help the school in various ways are greatfully remembered last but not least.

The present principal Sr. Jacintha Fernando and all the teachers deserve a big thanks for their untiring efforts for the development of the school.

I wish them all success

**MR. A. R. Wijesinghe**
Divisional Director
of Educational - Nugegoda

# அதிபரின் ஆசிச்செய்தி



மேல் மாகாணத்தில் இராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம் தனது சேவைக்காலத்தின் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழாக் காணுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன். 1957ம் ஆண்டு 80 மாணவர்களையும் 03 ஆசிரியர்களையும் வளமாகக் கொண்டு ஒரு நற்குறிக்கோளை முன் வைத்து தன் பணி ஆரம்பித்த இவ்வித்தியாலயம், தன் இலட்சியத்தில் தவறாது இற்றைவரை ஆற்றிய சேவையின் பயனாக, வளர்ந்ததோர் விருட்சமாகத் தன் நிழலில் ஏறத்தாழ 300 மாணவர்களையும் 16 ஆசிரியர்களையும் கொண்டிருக்கின்றது.

50 ஆண்டுகள் இவ்வித்தியாலயம் சமூகத்திற்கு ஆற்றி வந்துள்ள சேவையைப் பாராட்டத் தவறுவோமாயின் செய்ந்நன்றி மறந்தவர்களாவோம். கலவன் வித்தியாலயம் என்பதன் மூலம் இருபாலாரும் கற்கின்ற பாடசாலை என்பதை எடுத்துக் காட்டுகின்றதைப் போலவே, இனத்தால் தமிழ், முஸ்லிம் மாணவர்கள், மதத்தால் கத்தோலிக்க, கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம் மாணவர்கள் ஒன்றுபட்டு ஒருதாய் பிள்ளைகள் போன்று இப்பாடசாலை அன்னையின் அரவணைப்பில் கல்வி பெறுகின்றமை எமக்கு மகிழ்ச்சியயைத் தரும் விடயமாகும்.

இத்தகையதோர் கல்விக் கூடம் நீடூழி வாழவேண்டும் வளர வேண்டும். இது தன் வாழ்க்கைப் பயணத்தில் முகங்கொடுத்த தடைகளைத் தாண்டி இற்றைவரை தன் பயணம் தொடர ஊன்று கோலாக விளங்கிய பெற்றோர், பெரியார்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் இந்நன்நாளில் நன்றியுடன் நினைவு கூர்கிறேன். தொடர்ந்தும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு, இதன் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கண்டு மகிழும் அனைவரும், கைகொடுத்து உதவ முன்வர வேண்டும். இதுவே இன்றைய நாளில் எனது பிரார்த்தனையும், வாழ்த்துக்களுமாகும்.

*வாழ்க இராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம்*
*வளர்க அதன் பணி*
*பரவுக அதன் நற்சுகந்தம்*

**அருட்சகோதரி. ஜசிந்தா பெர்னாண்டோ**
அதிபர்
இராஜகிரிய றோ.க.த.க.வி

# உப அதிபரின் ஆசிச் செய்தி



ஸ்ரீ ஜயவர்த்தனபுர கல்வி வலயத்தில் சிறப்பாகச் சேவையாற்றி நிற்கும் தமிழ்மொழி மூலப் பாடசாலையான இராஜகிரிய றோ.க.த.க பாடசாலை தன் வளர்ச்சிப் பாதையில் காலத்தாலும் அகவை ஐம்பதை எட்டி நிற்பது தமிழ் பேசும் சமூகமே புளகாங்கிதம் அடையக் கூடிய ஒரு நிகழ்வென்று கூறின் வியப்பில்லை.

இச்சமயம் இப்பாடசாலையில் ஒரு உபஅதிபராக கடமையாற்றி நிற்கும் பேறு எனக்கு உண்மையில் இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிக்கின்றது. இதன் நிமித்தம் வெளிவரும் பொன்விழா இதழிற்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் எனது பார்வையில் பாடசாலை பற்றிய சில சிந்தனைகளையும் மீட்டிப் பார்க்கின்றேன்.

1957ம் ஆண்டு மாசித் திங்கள் ஆறாம் நாள் பிரசவிக்கப்பட்ட இப்பாடசாலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ச்சியடைந்து இன்று க.பொ.த. சாதாரணம் வரையான வகுப்புக்களையும், கணினிக் கூடம், நூலகம், ஆய்வு கூடம் எனப் பல ஏற்றங்களை இன்றுவரை பெற்றிருப்பது கண்கூடு. மேலும் பாடசாலை தன் சமூகத்துடன் அன்னியோன்னிய உறவைப் பேணி பாடசாலையால் சமூகமும், சமூகத்தால் பாடசாலையும் பின்னிப்பிணைந்து வளர்ச்சியடைவதை என் சேவைக்கால அனுபவத்தினூடாக உணரக்கூடியதாக உள்ளது.

பொன்விழாவில் புதுப்பொழிவு பெறும் இப்பாடசாலை மேலும் வளர்ச்சிபெற்று கல்விப் பணியில் உன்னத நிலையை அடைவதுடன் பாடசாலை தன் தரநிலையிலும் மேம்பாடடைய வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

**திருமதி. ச. சிவமூர்த்தி**<br>
உப அதிபர்<br>
இராஜகிரிய றோ.க.த.க.வி

# முன்னாள் அதிபரின் ஆசிச்செய்தி



இராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் தனது 50வது விழாவைக் கொண்டாடும் செய்தியைக் கேட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். 1957ம் ஆண்டுகளில் தனது பணியை ஆரம்பித்த தமிழ்ப் பாடசாலை என்ற பெருமையை இது பெறுகின்றது. இராஜகிரிய பகுதியில் வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கையில் பாரிய மாற்றத்தையும், புத்தாக்கத்தையும் ஊட்டிய ஒரு பாடசாலை என்று கூறுவதில் எதுவித சந்தேகமும் இல்லை. பல வருடகாலமாக வளப்பற்றாக் குறையினால் நலிவுற்றுப் போனது மட்டுமல்லாமல் அதற்கிருந்த உரிமையையும் இழக்க வேண்டி ஏற்பட்டது. 1996ம் ஆண்டு காலப்பகுதியில் அதிபராக பாடசாலை பொறுப்பினை ஏற்றுக் கொண்டபோது கட்டிடப்பற்றாக்குறையினால் இரு நேரப் பாடசாலையாக விளங்கியது. பெற்றோர் பெரியோர்கள் விடாமுயற்சியினால் படிப்படியாக பலவருட காலமாக இருந்த பிரச்சனைகளைத் தீர்த்து வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்லக்கூடியதாய் இருந்தது. என்னுடைய தனித்துவ வாழ்வில் எதற்கும் அச்சமின்றி முகங்கொடுக்க என்னை தைரியப்படுத்திய பாடசாலை இதுவாகும். வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவங்களை இப்பாடசாலையில் பணியாற்றிய காலங்களில் பெற்றுக்கொண்டேன். கல்வி அறிவையும் நற்பழக்க வழக்கங்களையும் நோக்காகக் கொண்டு தனது பணியை சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இப்பாடசாலை தனது பணியை மேலும் சிறப்பாகவும் செம்மையாகவும் இச்சமுதாயத்திற்கு செய்திட இறை ஆசியையும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அருட்சகோதரி. M.J.S.M. லூயிஸ்**
அதிபர்
பு/சென் மேரிஸ் த.ம. வித்தியாலயம்
புத்தளம்

# ஆசிரிய ஆலோசகரின் ஆசிச்செய்தி



## 'பல்லாண்டு சேவைக்கு பலகோடி வாழ்த்துக்கள்'

இராஜகிரிய பகுதியில் இளமைப் பொலிவுடன் இனிய மணம் பரப்பி நிற்கும் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இன்று தனது ஐம்பதாவது அகவையைப் பூர்த்தி செய்து பொன்விழா கொண்டாடுவதை எண்ணிப் பூரிப்படைகிறேன்.

மனிதனைப் புனிதனாக்கும் கல்வியின், மூலகாரணமான பாடசாலைகள் நாட்டின் விலைமதிக்க முடியாத சொத்துக்களாகும். ஒரு பாடசாலையும் அதன் சமூகமும் கொண்டுள்ள இவ்வினைத் தொடர்பானது சமூகத்தின் பலத்திற்கும் அப்பாடசாலையின் திடத்திற்கும் அத்திவாரமாய் அமைகிறது. ஒரு பாடசாலை ஐம்பது ஆண்டுகாலம் நிலைத்து நின்று ஒரு சமூகத்திற்குச் சேவை புரிகின்றமையானது அதன் பலத்தினையும் பயன்படுதன்மையையும் பறைசாற்றுகிறது. இப்பாடசாலை நன்மலர்களை நாடெல்லாம் பரப்பியுள்ள கலைக்கோயில் என்பதில் ஐயமில்லை.

மாணவர்களின் வளமான வாழ்விற்கு தியாக உணர்வுடனும், பொறுப்புடனும், தம் தன்னலமற்ற சேவையினால் போஷாக்கு ஊட்டிவரும் தற்போதைய அதிபரும், ஒத்துழைத்து கைகொடுத்து நிற்கும் ஆசிரியர்களும் போற்றுதற்குரியவர்கள்.

சகல துறைகளிலும் மேலும் வளர்ச்சியுற்று சமுதாய மறுமலர்ச்சியில் தனித்துவமான இடத்தைப் பெற வேண்டுமென மனமார வாழ்த்துவதுடன் பொன்விழா வைபவம் இனிதே நிறைவுற இறையாசி வேண்டி நின்கிறேன்.

***திருமதி. அருந்ததி இராஜவிஜயன்***
ஆசிரிய ஆலோசகர்
மேல் மாகாணம்

# ஆலோசனை செயற்திட்ட ஆசிரியரின் வாழ்த்துச் செய்தி




பாடசாலை வரலாற்றில் ஐம்பது ஆண்டுகள் என்பது இயல்பாயினும் வட, கிழக்கிற்கு வெளியில் உள்ள தமிழ் மொழி மூலமான பாடசாலை, பொருளாதாரத்தால் நலிவுற்ற ஒரு சமூகப் பின்புலத்தைக் கொண்ட ஒரு பாடசாலை, மேலும் கொழும்பிற்கு வெளியில் உள்ள இராஜகிரியவில் உள்ள பாடசாலை அதன் பொன்விழாவைத் தொடுகின்றது என்றால் அது நிலைத்து நிற்பதற்கு எத்தனை இன்னல்களை எதிர்கொண்டிருக்கும் என்பது எளிதாகவே எவருக்கும் புரியும்.

சுயமொழிக்கல்வி வெறும் அலங்கார வர்ணிப்பாய் இருக்க, சுயமொழிக் கல்வியின் அவசியத்தை உணராத, உணர வைக்காத, அன்றாட சாதாரண உணர்வுகளையே வேற்றுமொழியிலே வெளிப்படுத்தி நிற்கின்ற ஒரு சமூகத்தைக் கடந்த ஐம்பது வருடங்களாகச் சுயமொழி மூலம் போதித்து வந்திருப்பது தமிழ்மொழியின் இருப்பைக் காலத்துடன் மண்ணில், மக்களில் சாதித்துக் காட்டிய நிகழ்வென்றே கூறிப் பெருமைப்பட முடியும்.

றோமன் கத்தோலிக்க சமயம் தொடர்புற்ற பாடசாலை என்பதால் சங்கைக்குரிய சகோதரிகளே அதிபராய் இருந்து வளர்த்தெடுத்துவரும் பேறு கிடைத்திருப்பது இச்சமூகத்தில் இப்பாடசாலை இருப்பை-வளர்ச்சியை இயைபாக்கியுள்ளது என்பதும் உண்மையே. நடப்பு அதிபர் அருட்சகோதரி ஜசிந்தாவின் துல்லியமான செயற்பாடுகள், இப்பாடசாலையின் பொன்விழாக் காலத்தில் அவர் அதிபராய் வாய்த்திருப்பது இறை அருளே என்று கூறி நிற்கும் அதேவேளை இப்பாடசாலை பொன்விழா கடந்த பொன்விழாவும் காண வளரவேண்டியது, வளர்க்க வேண்டியது தமிழ்த்தாய்க்கு நாம் செய்யும் பெரும் கடப்பாடு ஆகும். இதற்காக இறை அருளை வேண்டி நிற்பதுடன் பொன்விழா மலரின் எண்ணப்பொலிவு காலத்துடன் வண்ணப் பொலிவாக மலர வாழ்த்தி நிற்கிறேன்.

**திரு. ச. இராகவானந்தன்**
ஆலோசனை செயற்திட்ட ஆசிரியர்

# நுண்கலை ஆசிரியரின் ஆசிச் செய்தி



கல்வி விருத்தியில் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய இயற்கைப் பெற்றிகள் விருத்தியடைய வேண்டும் என்பது அகிம்நா மூர்த்தியின் சிந்தனை வெளிப்பாடாகும். இம் மூவகை நோக்குகளும் கவின் கலையூடாகவே எய்திட முடியும் என்பது உண்மை. இப் பாடசாலையின் கவின்கலை, கற்றல் அம்சங்கள் ஆசிரிய வளம் இல்லாத போதிலும் இற்றைவரை சிறப்புற்று அமைந்தமைக்கு இருந்த வள ஆளணியின் பங்காற்றலும் மாணவரின் இயல்பான ஆற்றல்களுமே காரணம்.

பாடசாலை அதிபரின் அயராத முயற்சியினால் கவின்கலைக்கான ஒரு ஆசிரியர் நியமனம் அடையப் பெற்றிருப்பதும் அத்தகைய பேறு எனக்கு வாய்த்திருப்பதும் பாடசாலைப் பொன்விழா காலப்பகுதியில் இங்கு கடைமையாற்ற அவ்வாய்ப்பு வந்திருப்பதுவும் உண்மையில் எல்லையில்லா மகிழ்ச்சியை எனக்கு அளிக்கின்றது. இப்பாடசாலையின் சமூகத் தொடர்புகள், பாடப் புற விதானச் செயற்பாடுகளின் ஆரோக்கிய நிலைமைகள், உண்மையில் நனிசிறந்த நுண்கலைத் தேர்ச்சி மாணவர்களை ஆக்கிட முடியும் என்பது குறுகிய கால அனுபவத்தி னூடாகவே என்னால் உய்த்துணரக் கூடியதாக உள்ளது.

பொன்விழாவில் தடம் பதிக்கும் இவ்வேளையில் நுண்கலையூடாகவும், மாணவ ஆற்றல் பொன்போற் பொலிவுபெற இறையருள் வேண்டி நிற்பதுடன், ஒளிபரப்பி வெளிவரும் பொன்விழா மலருக்கும் ஆசிகூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**திருமதி. T. பிரஹலாதன்**
நுண்கலை ஆசிரியை

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் செய்தி



இராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயத்தின் 50ஆம் ஆண்டு ஜுபிலி விழாவில் இப்பாடசாலை 1957ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை ஐம்பது ஆண்டுகள் கடந்து தமது பெயரை நிலைநாட்டி வருகின்றது. இது பாராட்டக் கூடிய விடயம் ஆகும்.

இப்பாடசாலையை வழிநடத்தும் அதிபர் முதல் கற்பிக்கும் ஆசிரியர், கல்வி கற்கும் மாணவர்கள் வரை அனைவரும் மிகவும் ஆர்வத்துடன் வழிநடத்திச் செல்வதை இந்த ஜுபிலி விழாவில் இருந்தே அனைவரும் புரிந்து கொள்ளலாம். தெரிந்து மகிழலாம்.

இப்படியான ஒரு பாடசாலையில் நான் செயலாளர் என்னும் ரீதியில் பணியாற்றுவதை முன்னிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். பெற்றோரும், மூத்தோரும் தமது பிள்ளைகளின் அன்றாடக் கல்விக் கருமங்களில் கவனஞ் செலுத்தி அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிய வேண்டியது அவசியமாகும். அதன் மூலம் அவர்கள் கல்விச் செயல்முறையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் துணை புரியலாம்.

இந்நூலைத் தயாரித்து வெளியிடுவதில் அயராது உழைத்த அனைவருக்கும் எனது நன்றியறிதல் உரித்தாகும்.

**திருமதி. P. செல்வன் ஜெயந்தி**
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# அகவை ஐம்பதில் இராஜகிரிய றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம்

பாடசாலையின் வரலாற்றில் ஐம்பது ஆண்டுகளைத் தொட்டு நிற்பது பாடசாலைச் சமூகத்தின் கடந்த ஐம்பது வருடச் சேவையையும், அர்ப்பணிப்பையும் பறைசாற்றி நிற்கும் நிகழ்வாகும். கொழும்பிற்கு வெளியே ஸ்ரீ ஜயவர்தனபுரத்திலுள்ள ஒரு தமிழ் மொழி மூலமான பாடசாலை இத்தனை காலம் நிலைத்து நின்று சேவை புரிகின்றது என்றால் அதன் நிலவுகைக்கான சேவையாளர்களின் பங்களிப்பு வார்த்தைகளால் வடிக்கக்கூடியது அல்ல.

1957ம் ஆண்டு மாசித்திங்கள் ஆறாம் நாள் தனது கல்விப் பணியினை ஆரம்பித்த இப்பாடசாலை சேவைநாடிகளாக எண்பது மாணவர்களைக் கொண்டிருந்தது. இதன் ஸ்தாபித அதிபராக அருட்சகோதரி. மேரி ஜொகானா தொடர்ந்து ஈராறு ஆண்டுகள் கடமை புரிந்தார். குடியேற்றக் காலப்பின்னணி என்பதால் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் சமயப் பணியுடன், கல்விப் பணியும் ஒருங்கே நிகழ்ந்த காலகட்டத்தில் திருக்குடும்பத் துறவிகள் சபையின் அனுசரணையில் ஆரம்பமான இப்பாடசாலையை ஆயர் அதி. வணக்கத்திற்குரிய ஜோய் குணவர்தன அவர்களே முகாமைப்படுத்தி நடாத்தி வந்தார். இப்பிரதேசத்தின் கல்விநிலை விருத்தியின் ஆரம்பநிலையில் இப்பாடசாலையின் பங்களிப்பு மகத்தானதாகவே இருந்தது என்பதற்கு அக்காலத்தில் பயின்ற மாணவர்களின் உன்னத நிலை சான்றாக உள்ளது.

1960ல் அரச பாடசாலைகளாக அரசாங்கம் பாடசாலைகளை நாடளாவிய ரீதியில் சுவீகாரம் செய்த போதும் நாம ரீதியாக றோமன் கத்தோலிக்க பாடசாலையென்றே பெயரிட்டு இன்றும் தொடர்வது கிறிஸ்தவ சமயம் சார்ந்த சேவையின் தொடர்ச்சியை வெளிப்படுத்தி நிற்பதோடு தொடரும் அதிபர்களாக அருட்சகோதரிகளே சேவையாற்றுவது வழிமுறையாகவும் உள்ளது. ஸ்தாபித அதிபர் அருட்சகோதரி மேரி யொஹானா 1969 வரை கடமையாற்றிய பின் தற்போதுள்ள அருட்சகோதரி ஜசிந்தா வரை இடைப்பட்ட காலத்தில் ஐந்து அதிபர்கள் சேவையாற்றியுள்ளனர். அருட்சகோதரிகளான மேரி அல்பட்டா, மேரி ஜொவிற்றா, மேரி யொலான்ட், திருமதி. முதியன்சே, அருட்சகோதரி மலர் லூயிஸ் ஆகியோர் சேவையாற்றி உள்ளனர். 1996ம் ஆண்டு பதில் அதிபராக திரு. K. சிவகுமார் சேவையாற்றியுள்ளார்.

முதல் மூன்று அதிபர்களின் பெயரிலேயே இல்லங்கள் அமைக்கப்பட்டு வருடாவருடம் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருவது வழமையாகும். 1979ம் ஆண்டிலேயே க.பொ.த சாதாரண தர வகுப்பிற்கான பரீட்சையில் இப்பாடசாலையிலிருந்தும் மாணவர் தோற்றும் தகைமையைப் பெற்றுக்கொண்டனர். பிரதான வீதியின் பக்கத்திலிருந்த போதிலும், பாடசாலை வளங்கள் மிக அரிதாகவே உள்ள இப்பாடசாலை இருக்கின்ற வளங்களைக் கொண்டு உச்சப்பயனைப் பெறும் செயன் நோக்கில் தன்னால் இயன்றவரை சிறப்பாகவே சேவைபுரிந்து வருகின்றமை இப்பாடசாலைச் சமூகத்தின் உன்னத பங்களிப்பிற்கும், பாராட்டிற்கும் உரியவையாகும்.

இருதயநாதர் ஆலயத்தின் அன்பளிப்பாக நிலத்தைப் பெற்று, கோட்டே பாராளுமன்ற உறுப்பினரும் ராஜாங்க அமைச்சருமான கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸின் பங்களிப்பால் இருகட்டிடங்களைப் பெறும் வாய்ப்பைப் பெற்று இன்றும் அக்கட்டிடத்திலேயே இப்பாடசாலை இயங்கி வருகின்றது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்த ஒபேசேகரபுர தமிழ் வித்தியாலயத்தை ஆதரித்து அரவணைத்து இடம் கொடுத்து நடாத்த உதவிய சேவையைத் தேவையின் நிமித்தம் செய்து 2001 ஆண்டு அப்பாடசாலை மீளவும் தனது பழைய இடத்திற்குச் செல்லும்வரை 20 வருடங்களாக தன் சகோதர பாடசாலைக்குச் செய்த சேவை என்றென்றும் நினைவு கொள்ளத்தக்கது.

2004ம் ஆண்டு முன்புறம் ஒரு விஞ்ஞான கூடத்தை மேலதிக கட்டிடமாகப் பெற்றுக் கொண்டதும், வளர்ச்சிப் போக்கில் கணினிக் கூடம், வாசிப்பு அறை, மூலிகைத் தோட்டம், சிறுவர் விளையாட்டுப் பூங்கா, ஆசிரியர்கள் ஓய்வு அறை எனத் தனக்குரிய தேவைகளை இருக்கின்ற வளங்களுக்குள்ளே ஆக்கியும் புதுப்பித்தும் வரும் இப்பாடசாலை தன் பொன்விழாவை அண்மிக்கும் இவ்வேளையில் புதிய பல திட்டங்களுடன் தன்னை வளர்த்தெடுக்கும் நோக்கில் துரிதமாகவே செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரதான வீதியோடு கூடிய எல்லை மதிலை உயர்த்திச் செப்பனிட்டமை சிறுவர் விளையாட்டுப் பூங்கா, மூலிகைத் தோட்டம் என்பவற்றின் புத்தாக்கங்கள், உட்புறச் சுவர்களில் அறிவை மேம்படுத்தும் வண்ணமயமான கட்புலச் சாதனங்கள், நெறிப்படுத்தும் சுலோகங்கள் என இவற்றை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

பொன் விழாவில் பொலிவுறும் இப்பாடசாலை வளர வேண்டியதும், மேலும் வளர்க்க வேண்டியதும் இப்பாடசாலை சமூகத்தின் வரலாற்றுக் கடமை என்பது உண்மையே.

வரலாற்றுத் தொகுப்பு
**திரு. ச. இராகவானந்தன்**
ஆசிரியர்

## அழகுகள் பலவிதம்

| | | |
|---|---|---|
| அன்பிற்கு | அழகு | அறிவு |
| அறிவிற்கு | அழகு | கல்வி |
| கல்விக்கு | அழகு | ஒழுக்கம் |
| ஒழுக்கத்திற்கு | அழகு | படிப்பு |
| படிப்பிற்கு | அழகு | பட்டம் |
| பட்டத்திற்கு | அழகு | வேலை |
| வேலைக்கு | அழகு | கடமை |
| கடமைக்கு | அழகு | நேர்மை |
| நேர்மைக்கு | அழகு | உண்மை |
| உண்மைக்கு | அழகு | உழைப்பு |
| உழைப்பிற்கு | அழகு | ஊதியம் |
| ஊதியத்திற்கு | அழகு | சிக்கனம் |
| சிக்கனத்திற்கு | அழகு | சேமிப்பு |
| சேமிப்பிற்கு | அழகு | ஈகை |
| ஈகைக்கு | அழகு | கருணை |
| கருணைக்கு | அழகு | இரக்கம் |
| இரக்கத்திற்கு | அழகு | அமைதி |
| அமைதிக்கு | அழகு | கடவுள் |
| கடவுளுக்கு | அழகு | அருள் |
| அருளிற்கு | அழகு | பக்தி |
| பக்திக்கு | அழகு | அன்பு |

*தேடல்: செல்வன். மோகன்*
*தரம் 11*

## நீடூழி வாழ்க றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயம்

வாழ்ந்து வளர்ந்தது ஐம்பது ஆண்டுகள்
வாழ்க வளர்க இன்னும் பல்லாண்டுகள்
கற்று உணர் என்ற கொள்கையின் - வழியில்
பற்றிட வைத்தது பண்பினை வளர்த்தது.

அன்னையாய் அரவணைத்து தந்தையாய் அறிவூட்டி
அன்பின் வழியைக் காட்டியது இவ்வித்தியாலயம்
கயவனையும் மனிதனாக்கும் கலைக்கூடமிது
கற்றிட உகந்ததோர் கலைப்பீடமிது

கல்வியைச் சிறப்பிக்கும் இடம் இதுவே
கலைகள் மிளிரிடும் கூடம் இதுவே
அறிவூட்டும் ஆசான்களையும் நற்பண்புடன் ஒளிரும்
மாணவர்களையும் கொண்டது எம்
றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்

பொன்விழாக் காணும் வித்தியாலயமிது
போற்றிப் புகழ்வோம் என்றென்றும்
பிறப்பு அன்னையால் சிறப்பு கல்வியால் - அச்சிறப்பைத் தந்து
சிறப்பின் தோற்றத்தை விளக்கும் வித்தியாலய அன்னையே
நீ வாழிய வாழிய வாழியவே

செல்வி. S. சிவரஞ்சனி
தரம் 11

## எனது பாடசாலை அன்னை

எங்கள் ஊரு அன்னையாம்!
தங்கமான அன்னையாம்!
தப்பேதும் பண்ணாத
தரமான அன்னையாம்!

ஒழுக்கத்தை சொல்லித்தரும்
ஒசந்தயிடம் பள்ளியிலே!
இழுக்கை உண்டு பண்ணும்
ஓரிருவர் இவள் போல,

மாணவப் பிஞ்சுகளின்
மனதில் தோன்றிய
மன்மதன் இவளுக்கு
ஊரெல்லாம் பள்ளியாம்!

M.I.M. **முஹியத்தின்**
தரம் 08

## அன்னையே வாழ்க

கல்வி எனும் பூஞ்சோலையில்
கலைகளை கண்டெடுத்து
எம்மை எப்போதும் வழி நடத்துவது
எமது பாடசாலை அன்னை!

பள்ளி எனும் காலத்தில்
நல்ல நட்பைக் கொடுத்து
எமக்கு எம் உறவு போல்
எவ் வேளையிலும் உதவும்
பாடசாலை அன்னை!

எமது திறமையை
வெளிப்படுத்துவதற்கு
எம்மை மற்றைய மாணவர்களுடன்
போட்டி போட வைத்து
வெற்றி வாகை சூடும் போது
முதல் எழுத்தாகப் போடுவது
எமது பாடசாலை அன்னையே......

**செல்வி. வியாகுலச் செல்வி**
தரம் 09

## எனது பாடசாலை அன்னை

அன்னை கல்வி அன்னை அவள்தான் என் கனவு
என் வாழ்க்கைக் கடலில் பயணம் செய்ய ஏதுவான படகு
என் நீண்ட பயணம் நிறைவேற துணை நின்ற அமுது
என் இலட்சியத்தை சாத்தியமாக்க கரம் கொடுத்த இனிது

தாயே! நான் சிற்பமாக நினைத்தேன் நீ உளியாகினாய்
தாயே! நான் சித்திரமாக நினைத்தேன் நீ சுவராகினாய்
தாயே! நான் மொழிக்கலை கற்றேன்
என்னை பேச்சாளனாக்கினாய்
எனக்கு கவிக்கலை கற்பித்து என்னை கவிஞனாக்கினாய்

பெற்றெடுத்தவள் என் அன்னை - பேராற்றல் தந்தவள் நீ
உருக்கொடுத்தவர் என் தந்தை - உயர்நிலை தந்தவள் நீ
என் புகழ்ச்சிக்கு உரியவள் நீ - புகழ் பெற்றவன் நான்
வாழ வந்தவன் நான் - என்னை வாழ வைத்தவள்
எனது பாடசாலை அன்னை

M. **டெரன்ஸ் ஸ்பென்சர்**
தரம் 08

## வாழ்க வளமுடன்

எம்மை ஈன்றெடுத்த கல்வி அன்னையே!
உன் திருப்பாதத்தினிலே வழிந்தோடுகின்ற
பெரும் தூறல்களிலும் சிறு சாரலான
எம் றோ.க.த.க. பாடசாலை

கல்வியில் செழித்திடும் பூஞ்சோலையிலே
பூக்களாய் பூத்த மாணவச் செல்வங்களே
உன் அறிவாற்றல் வளர்ச்சியிலே
நற்பெயர் பெற்றுத் தந்திடுவீர்

நல் அறிவூட்டும் ஆசிரியர் நல் வழி காட்டும் ஆசிரியை
நட்பை வளர்க்கும் நண்பர்கள்
நாம் எல்லோரும் பணிந்திடும் எம் அதிபர்
எல்லோரையும் இணைத்திடும் இப் பாடசாலை

கலை, அன்பு, ஒற்றுமை, நற்பண்பு
வளர்ந்து நாளும் நிறைந்திடவே
மனநிறைவோடும், கல்வியறிவோடும்
நிலைத்து நீடூழி வாழ வேண்டும் நம்
றோ.க.த.க. பாடசாலை

**செல்வி. அர்ச்சனா**
தரம் 11

## நீடூழி வாழ்க றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை

பொன்விழாவாம் பொன்விழா றோமன்
கத்தோலிக்க பாடசாலையிலே
எம் பாடசாலையை வாழ்கவென வாழ்த்துகிறோம்
அன்னையாம் இவளை இந்நாளில்

இப்பாரிலுள்ள அறிவிலிகளுக்கு அறிவூட்டும் அறிவுக்
கடலே நீ வாழ்க சேயாய் எம்மை
ஈன்றெடுக்காத தாயே நீ வாழ்க சிறந்த
கலைச் செல்வம் தரும்
செல்வமே நீ என்றென்றும் வாழ்க

கற்றுணர் என்ற மகுடவாசகத்திற்கேற்ப
கற்றுணரவைத்தாய்
ஒளியாய் என்றும் எங்கள் நெஞ்சில் ஒளிவிடும்
ஒளியே நீ வாழ்க ஒளிச் சுடரே நீ வாழ்க
நற்பாடசாலையே நீ வாழ்க

ஐம்பது ஆண்டுகள் எமக்காய் நீ பணிசெய்து
பொன்விழாக் காணும் உனக்கு எம்
வாழ்த்துக்கள் எம் வாழ்வைச் சிறக்க வைத்த
சிறப்பு மிகு அன்னையே நீ வாழ்க! வாழ்க!

**செல்வி. நிரோசினி**
தரம் 11

## வாழ்க்கை

| | |
|---|---|
| வாழ்க்கை ஒரு சவால் | அதனை சந்தியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பரிசு | அதனை ஏற்றுக்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சாகசப்பயணம் | அதனை மேற்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு சோகம் | அதனைக் கடந்து வாருங்கள் |
| வாழ்க்கை ஒரு துயரம் | அதனைத் தாங்கிக் கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு கடமை | அதனை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு இரகசியம் | அதனைக் கண்டறியுங்கள் |
| வாழ்க்கை ஒரு பாடல் | அதனைப் பாடுங்கள் |
| வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் | அதனைப் பயன்படுத்துங்கள் |
| வாழ்க்கை ஒரு பயணம் | ஆனந்தமாய் பயணியுங்கள் |
| வாழ்க்கை ஒரு உறுதிமொழி | அதனை நிறைவேற்றுங்கள் |
| வாழ்க்கை ஒரு ஒரு காதல் | அதனை அன்பு செய்யுங்கள் |
| வாழ்க்கை ஒரு அழகு | அதனை இரசியுங்கள் |
| வாழ்க்கை ஒரு உணர்வு | அதனை உணர்ந்து கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு போராட்டம் | அதனை எதிர்கொள்ளுங்கள் |
| வாழ்க்கை ஒரு இலக்கு | அதனை எட்டிப் பிடியுங்கள் |

தேடல்: **செல்வி. ஜீனத் பீபீ**
தரம் 11

## அறிவிற்கு ஆலோசனை

1. மாணவர்கள் கற்பதற்கான வழி படிப்பதுதான். இப்பாதை கரடு முரடானது. செங்குத்தானது. கடினமானது. கடின உழைப்பு இல்லாமல் படிப்பு இல்லை.
2. கெட்டிக்காரத்தனம் என்பது, ஒரு பங்கு அறிவும், தொண்ணூற்று ஒன்பது பங்கு கடின உழைப்பும் சேர்ந்தது.
3. திறமையாகப் படிப்பதற்கு உன்னுடைய ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்து

**திருமதி. S. இராஜமுத்து**
ஆசிரியை

## வெற்றி மனதிலிருந்து உருவாகின்றது

இவ்வுலகில் எல்லாச் செயல்களுக்கும் காரணம் மனிதருடைய சிந்தனையே. மனிதர் முடியும் என்று நினைப்பதாற்தான் எதையும் செய்ய முடிகிறது. எனவே வெற்றி பெற முதலில் நாம் செய்யும் காரியத்தில் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். நம்மால் முடியும் என்று நினைத்தால், எதையும் சாதிக்க முடியும்.

1. 1490-ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டு இராயல் கமிட்டி ஆசியாவுக்குக் கப்பல் மூலமாகப் பயணம் செய்வது இயலாது என்று திரும்பத் திரும்பக் கூறி வந்தது. இதற்கு மேற்குக் கடற்பகுதி பயணம் செய்ய ஏற்றதாக இல்லை என்று காரணம் கூறினர். ஆனால், ஓராண்டுக்குள் கிறிஸ்டோபர் கொலம்பஸ் என்பவர் கடற்பயணம் மேற்கொண்டு சாதனை படைத்தார்.

2. 1825-ஆம் ஆண்டு லண்டன் நாட்டுக் குழு வொன்று, இரயில் பயணம் என்பது சாலை வழிப்பயணத்தை விட இரண்டு மடங்கு வேக மாக அமையும் என்று நினைப்பது சாத்திய மில்லை என்று கூறியது. ஆனால் ஸ்டீபன்சன் நீராவி இஞ்சினைக் கண்டு பிடித்து இரயில் பயணம் சாத்தியம் என்று நிருபித்தார்.

3. 1903-ஆம் ஆண்டு நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிகை அறிவியல் அறிஞர்கள் விமானப் பயணம் குறித்த சோதனையில் தங்களுடைய நேரத்தையும் பணத்தையும் வீணாக்க வேண் டாம் என்று கேட்டுக்கொண்டது. இச்செய்தி வெளியான ஒரு வாரத்தில் ரைட் சகோதரர்கள் வான்வெளிப் பயணத்திற்கு விமானத்தைக் கண்டு பிடித்தனர்.

4. 1948-ஆம் ஆண்டு விண்வெளிப் பயணம் ஆபத்தானது, மனிதர் மேற்கொள்ள முடியாதது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படி மேற் கொண்டாலும் இன்னும் 200 ஆண்டுகள் கழித் துத்தான் வெற்றி கிடைக்கும் என்றது. இச்செய்தி வெளியாகி 21 ஆண்டுகளில் நீல் ஆம்ஸ்ட்ராங் நிலவில் தன் காலடியைப் பதித்தார்.

இச்சம்பவங்களை நினைக்கும்போது ஒரு செய்தி தெளிவாகிறது. இவ்வுலகில் எல்லா வெற்றிகளுக்கும் தோல்விகளுக்கும் நமது மனமே முதற் காரணம் ஆகும். வெற்றி பெற்றவர்கள் வெற்றியைக் குறித்தே எப்போதும் நினைக்கிறார்கள். தோல்வி அடைந்த வர்கள் தோல்வி கண்டதற்கு ஆயிரம் காரணம் சொல்கிறார்கள். எல்லாவற்றிற்கும் அவர்கள் மனமே காரணம்.

***வழங்கியவர்: திருமதி. S. இராஜேந்திரன்*** - ஆசிரியை

## உங்களுக்குத் தெரியுமா?

| | |
|---|---|
| ஒலிவ் இலைகள் | - சமாதானம் |
| வெண்புறா | - அமைதி |
| சிவப்புக் கொடி | - ஆபத்து |
| அரைக்கம்பத்தில் கொடி | - துக்கம் |
| செஞ்சிலுவை | - மருத்துவ உதவி |
| சிவப்புச் சக்கரம் | - வளர்ச்சி |
| மஞ்சள் கொடி | - தொற்று நோய் |
| சிவப்பு முக்கோணம் | - குடும்பக்கட்டுப்பாடு |

*திருமதி. M. நாத் - ஆசிரியை*

## மொழியின் தனித்துவம்

| | |
|---|---|
| தமிழ் | - பக்தி மொழி |
| பிரான்ஸ் | - காதல் மொழி |
| ஆங்கிலம் | - வணிகமொழி |
| கிரேக்கம் | - சட்டமொழி |
| இத்தாலி | - இசை மொழி |
| உருது | - கவிதை மொழி |

## நூல்களின் மூலமொழி

| | |
|---|---|
| பைபிள் | - ஹீப்ரு |
| தர்மபதம் | - பாளி |
| குர்ரான் | - அரபு |

*திருமதி. பாத்திமாறியாசா ஆசிரியை*

## கல்வி பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்

1. "இயற்கைக்கு ஏற்ப விருத்தியடையும் செயற் பாடு கல்வி" - ரூசோ
2. "ஆரோக்கியமான உடலில் ஆரோக்கியமான உள்ளத்தை உருவாக்குவது கல்வி" - அரிஸ் டோட்டல்
3. "முழு மனிதனை உருவாக்குவது கல்வி" - கொமினிசியஸ்
4. "மனிதனை சான்றோர் ஆக்குவது கல்வி" - பழந்தமிழ் மரபு
5. "மனிதனிடம் ஆழ்ந்துகிடக்கும் உடல், உள் ளம், ஆன்மா ஆகிய இயற்கைப் பெற்றிகளை மலரச் செய்வது கல்வி" - காந்தியடிகள்
6. "மனிதனுள் புதைந்து கிடக்கும் பூரணத்து வத்தை வெளிப்படுத்துவது கல்வி" - சுவாமி விவேகானந்தர்
7. "கல்வி என்பது மனிதப் பண்பு விருத்தி" - சாயிபாபா
8. "என்னிடம் பாடசாலைகளை ஒப்படையுங்கள். நான் நீங்கள் விரும்பும் மனிதரை உருவாக்கித் தருகின்றேன்.... இது கல்வி நோக்கம் மட்டுமன்றி பாடசாலை நோக்கத்தையும் வெளிக்காட்டுகின்றது.

*திருமதி. K. காந்திமதிநாதன் - ஆசிரியை*

# உன்னை நம்பு

***சாமானியர்களின் அசாதாரண நம்பிக்கையால் சாதிக்கப்படுவதே வெற்றி!***

## பூனை கற்ற பாடம்

ஒரு பூனைக்குத் தன் இனத்தின்மீது நம்பிக்கை இல்லை."பூனையாய்ப் பிறந்து என்னத்தைக் கண்டோம். எல்லோரும் விரட்டுகிறார்கள். ஒரு வாய் பாலைக்கூட ஒளித்து ஒளித்து குடிக்க வேண்டி யிருக்கிறது. தெருவில் போனால் நாய்களுக்குப் பயப்பட வேண்டியிருக்கிறது. பூனை வாழ்வு ஒன்றுக்கும் உபயோகமற்றது என்று அடிக்கடி தன்னையே நொந்துகொண்டது." இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தது.

திருமணம் செய்துகொண்டால் ஒரு மிகப்பெரிய வீரனைத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும். எந்தப் பூனையையும் திருமணம் செய் யக்கூடாது என்று முடிவு செய்தது.

நேராகச் சூரியனிடம் சென்றது. "சூரியனே! சூரியனே! நீதான் ஒளியும் வெப்பமும் தருகிறாய். உன்னை எதிர்க்க இந்த உலகில் ஆளே கிடையாது. அதனால் நீதான் மாவீரன். மறுக்காமல் என்னை திருமணம் பண்ணிக்கோ" என்றது பூனை.

"அட போப்பா.... நானெல்லாம் சும்மா. என்னைவிட பெரிய வீரன் இருக்கிறான். அவன்தான் மேகம். சில சமயம் என்னையே அவன் மறைத்துவிடுகி றான்" என்றது சூரியன்.

உடனே பூனை மேகத்திடம் சென்று, "மேகமே மேகமே நீதான் வீரன். என்னைத் திருமணம் செய்துகொள்" என்று கெஞ்சியது.

"சும்மா கிண்டல் பண்ணாதப்பா... என்னைவிடக் கொம்பன் ஒருத்தன் இருக்கான். அவன் பேரு காற்று. அவன் வீசினால் என்னை இருக்கிற இடம் தெரியாமல் கலைச்சி விட்டுருவான்" என்றது மேகம்.

"காற்றே... காற்றே நீயாவது என்னைத் திருமணம் செஞ்சுக்கோ" என்று பூனை வேண்டியது.

"நான் மேகத்தைத்தான் கலைக்க முடியும். நான் என்னதான் பலமாக வீசினாலும் கும்குனு அசை யாமல் ஒருத்தன் இருப்பான். என்னையே திசை திருப்பிவிட்டிடுவான். அவன்தான் மலை" என்று காற்று கூறியது.

ஒரே ஓட்டமாக மலையிடம் சென்று "மாவீரனே! நீ என்னைக் கட்டிக்கோ" என்றது.

"அட! பெருதான் மலை. ஆனால் என் வயித்தையே தோண்டி ஓட்டை போடுற திறமைசாலி ஒருத்தன் இருக்கான். நீ அவனைக் கட்டிக்கோ. அவன்தான் என்னைவிடப் பலசாலி" என்றது மலை.

பூனைக்குச் சந்தோசம். "தயவுசெய்து அவரைக் கூப்பிடுங்கள். நான் அவரைத்தான் கட்டாயம் திருமணம் செய்துகொள்வேன்" என்றது.

மலையானது உலகின் மிகப்பெரிய பலசாலியான அந்த நபரைக் கூப்பிட்டது.

"யாருங்க அவரு? அவர் பேரு என்னங்க" என்றது பூனை. "அவரு பேரு எலி" என்றது மலை.

மலை எலியைக் கூப்பிட்டது. எலி வெளியே வந்து எட்டிப் பார்த்தது. பூனையைக் கண்டதும் ஒரே ஓட்டமாய் ஓடியது. அதன் பிறகு எட்டிக்கூட பார்க்க வில்லை.

பூனைக்கு அப்போதுதான் புத்தி வந்தது. "அடடா! நம் இனத்தின்மேல் நம்பிக்கை இல்லாமல் தேடித் தேடியலைந்து கடைசியில் எலியைத் திருமணம் முடிப்பது எவ்வளவு மோசமானது! புத்தி வந்ததும் நேரே பக்கத்து வீட்டில் இருந்த பூனையைத் திரு மணம் செய்துகொண்டு சந்தோசமாக வாழ்ந்தது.

***தேடல்: செல்வி ஷேக்கா***

*தரம் 7*

## கல்வியே கருத்தனம்

*வாழ்க்கை என்பது கடல் போன்றது. இருந்தும் கடலிற்கும் கரை உண்டு. கல்வி கரையிலாதது. வாழ்நாள் குறு கியது. கல்விப் பரப்பு அளவிலாதது. மணற்கேணி போன்று கல்வியோ கற்கக் கற்க பெருகும். நெருப்பால் வேகாததும் வெள்ளத்தால் கொள்ளை கொள்ளப் படாததும் கள்வரால் கவர முடியாததும் கல்வியே. நிரந்தர நிலையான அழகு கல்வியே. எதை இழந்தாலும் மீளவும் முயன்று பெற்றிட வாய்ப்புண்டு. ஆனால் கல்வியைப் பெறவேண்டிய நேரத்தில் பெற்றிடாது இழந்தால் மீளவும் பெறவே முடியாது. எந்தச் செல்வமும் கொடுக்கக் கொடுக்கப் குறைவுபடும். ஆனால் கல்வி ஒன்றே கொடுக்கக் கொடுக்கப் பெருகும் சிறப்பு வாய்ந்தது. இத்தனை சிறப்பு மிக்க கல்வியைக் கற்றுவிட்டால் சிறப் பல்ல. அதனை தன் வாழ்நாளில் பற்றி விடலே சிறப்பு. இதனாலேயே "கற்றறிந் தோன் யாவரெனின் கற்றதனை வாழ்வதனில் பற்றிடுவோன்" எனப் பாரதி பகிர்கின்றான். இதனையே அழகாக வள்ளுவன் "கற்க கசடறக் கற்க அதன்பின் அதற்குத் தக நிற்க" என சுருங்கச் சொல்லி விளக்குகின்றான்.*

*வழங்குபவர்*

*திருமதி. A. B. P. ஜவ்பர் - ஆசிரியை*

## அதிபர், ஆசிரியர்கள்



## மாணவத் தலைவர்களும், ஒழுக்காற்றுக் குழுவும்



தரம் 1 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



தரம் 2 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



தரம் 3 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



தரம் 4 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



தரம் 5 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



தரம் 6 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



தரம் 7 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)




தரம் 8 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



தரம் 9 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)




தரம் 10 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



## தரம் 11 மாணவர்கள் வகுப்பாசிரியருடன் (2006)



## தமிழ் மன்றம்



# பெற்றோரை மதிப்போம்

மனிதர்கள் யாரும் தானாய்ப் பிறந்துவிடவில்லை. பெற்றோரின் துணையின்றி எவருக்கும் பிறப்பு என்பது இதுவரை சாத்தியமில்லை. மனிதராய் மண்ணில் அவதாரமெடுத்ததாகக் கூறப்படும் கடவுள் கூட ஒரு குடும்பத்தில் பெற்றோரை நாடி தாயின் வயிற்றில் பிறந்ததாகத்தான் புராணங்கள் நமக்குக் கூறுகின்றன. எனவேதான் பெற்றோரின் பெருமையைப் பாடாத கவிஞர்களும் இல்லை, காவியங்களுமில்லை.

## இலக்கியமும் பெற்றோர் பாசமும்

தமிழ் இலக்கியத்தில் பெற்றோரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளவற்றைத் தொகுத்தால் அதுவே ஒரு மாபெரும் நூலாகவும் வாய்ப்பிருக்கிறது. ஒளவைப் பாட்டி பெற்றோரைத் தெய்வமென எண்ணி ***"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"*** என்று புகழ்ந்து பாடினாள். நமது மீசைக் கவிஞன் பாரதி **"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் - நற்றவ வானினும் நனிசிறந்ததுவே"** என்று பெற்ற தாயையும் நாட்டையும் "நல்ல தவம் புரிந்து கிடைக்கக் கூடிய சொர்க்கத்தைக் காட்டிலும் சிறந்தது" என்று கூறினான்.

நம் பாரதத் திருநாட்டைப் புகழும்போது கூட எம் தாய் தந்தையர் வாழ்ந்த நாடு என்றே எண்ணி எண்ணி இறுமாப்படைந்தான்.

***எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி***
***இருந்ததும் இந்நாடே - அவர்***
***சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து***
***சிறந்ததும் இந்நாடே.***

பாரதி வழிவந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் தன் பெற்றோர் மேல் வைத்திருந்த பேரன்பையும் பெருமதிப்பையும் தன் கவிகைளில் ஆழமாகப் புலப்படுத்துகிறார். தன் பெற்றோரின் நலனுக்காகவும், தாய்நாட்டின் நலனுக்காகவும் உயிரையும் அர்ப்பணிக்கத் தயாரெனக் கூறுகிறார்.

***எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும்***
***மக்கள் இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் - என்னால்***
***தினையளவு நலமேனும் கிடைக்குமெனில்***
***செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்.***

எவ்வளவு ஆழமான அர்த்தமுள்ள வரிகள். தாய் தந்தைக்குச் செய்யும் சேவைக்கு ஈடு இணை உண்டோ?

## நடமாடும் தெய்வங்கள்

பெற்றோர்கள் என்பவர்கள் நம் கண்ணால் காணும் நடமாடும் தெய்வங்கள். வீட்டுக்குள் வாழும் தியாகிகள். தன் பிள்ளைகளின் பெருமைக்காகப் பாடுபடும் உழைப்பாளிகள். நமது உயர்வில் உளம் மகிழ்வதும், நமது தாழ்வில் நெஞ்சம் கனக்கக் கண்ணீர் விடுவதும் பெற்றோரே.

தாயின் பரிவும் தந்தையின் அறிவும் இளம் பருவத்தினர்க்கு இரு இறக்கைகளைப் போன்றவை. எனவேதான் இன்றையத் திரைப்படப் பாடல்களிலும் கூட கவிஞர்கள் பெற்றோரின் அன்பை வியந்து போற்றிப் பாடுகிறார்கள்.

***பத்துமாதம் சுமந்து பெற்றாள் - அன்னை***
***பகலிரவாய் விழித்திருந்து காத்தாள்***

*வழங்கியவர்:*
***திருமதி. N. சண்முகநாதன்***
*ஆசிரியை*

# அகவை 50 காலப்பகுதியில் இராஜகிரிய றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் பணியாற்றிய அதிபர்கள்

1. அருட்சகோதரி மேரி யொகானா கோமஸ்
06.02.1957 – 15.06.1969



2. அருட்சகோதரி மேரி அல்பட்டா லோவ்
16.06.1969 – 31.12.1970



3. அருட்சகோதரி மேரி ஜொவிற்டா பெர்ணாண்டோ
01.01.1971 – 14.01.1976




4. அருட்சகோதரி மேரி யொலாண்ட் தமெல்
15.01.1976 – 09.11.1989



5. திருமதி ஜொசப்பின் முதியன்சே
10.11.1989 – 11.12.1995



6. திரு. K. சிவகுமார்
12.12.1995 – 14.11.1996



7. அருட்சகோதரி மலர் லூயிஸ்
15.11.1996 – 12.06.2003



8. அருட்சகோதரி மேரி ஜசிந்தா பெர்ணாண்டோ
13.06.2003



# MEMBERS OF STAFF IN THE YEAR 2007

| | |
|---|---|
| *Sr. Jacintha Fernando - Principal* | *S.L.P.S, Gr. II* |
| *Mrs. S. Shivamurthy - Vice Principal* | *S.L.P.S, Gr. II* |
| *Mrs. N. Shanmuganathan* | *B.A, Dip in Ed.* |
| *Mr. A. Mahendran* | *Maths (Spe. Trd)* |
| *Mrs. S. Rajamuthu* | *Tamil (Spe. Trd)* |
| *Mrs. S. Rajendran* | *English (Spe. Trd)* |
| *Mrs. A. B. P. Jaufer* | *Science (Spe. Trd)* |
| *Mrs. K. Kanthimathinathan* | *B.A, Dip in Ed* |
| *Mr. S. Ragavananthan* | *Science (Spe. Trd), B.A (Hons) Dip. in S.W* |
| *Mrs. F. R. Riyasa* | *Primary Trd.* |
| *Mrs. M. Ruth* | *Primary Trd.* |
| *Mrs. J. J. Stella* | *English (Spe, Trd)* |
| *Mrs. R. Suresh* | *Primary Trd.* |
| *Mrs. T. Prahalathan* | *B.A, (Fine Arts)* |
| *Mrs. M. A. S. Ravindra* | *B.A, Dip in Ed.* |
| *Mrs. S. Chrishanthi* | *Primary Trd.* |

*Miner Staff:* ***Mrs. D. T. Y. Priyadharshini***

# பாடசாலையின் புறவிதானச் செயற்பாடுகள்


## காலை உடற்பயிற்சி



## விஞ்ஞான செயன்முறை




## விளையாட்டு வேளையில் சிறார்கள்



## மதிப்பீட்டில் மாணவரை ஊக்குவித்தல்



# தரம் 1-2 போஷாக்கு உணவுத் திட்டம்






## மூலிகைத் தோட்டம்



## ஆசிரிய ஆலோசகர்களுடன் ஒன்றுகூடல்



## பொன்விழா அங்குரார்ப்பண நிகழ்வு
## 06.02.2006



## பொன்விழா சிறப்பு நிகழ்ச்சிகள்
## ஆசிரியர் தினம்




## சிறுவர் தினம்





## ஒளிவிழா




# வாணி விழா





# கண்காட்சியின் ஒருமுகம்



# பாடசாலையின் சிரமதானத்தில் பெற்றோர்





# பொன்விழாவில் உறுதி பூண்போம்

ஐம்பது ஆண்டுகள் ஒரு பாடசாலையை கட்டிக்காத்து வளர்த்து விட்டோம் என பெரு மகிழ்வுடன் இருக்கும் இவ்வேளையில் இப்பாடசாலை இனிவரும் காலங்களில் அடைய வேண்டிய இலக்குகளை துல்லியமாக அடைய முயற்சிப்பதும் பாடசாலை சமூகதத்தின் காலம் காலமான கடமையாகும். அந்த இலக்குகளை நோக்குகையில்...........

ஆரம்ப கல்வியைப் பொறுத்தவரை ஆசிரிய வளம் சிறப்பாக இருக்கும்போதும் பௌதீக வளங்கள் அரிதாகவே உள்ளன. இதனை அடைவதற்கான முயற்சிகளை சமூகத் தொடர்புகள், திணைக்களத் தொடர்புகள், சேவை உள்ளங்களில் இருந்து பெற திடசங்கற்பம் பூணுவோம். மாறாக இடைநிலைக்கல்வியில் ஆசிரிய வளப்பற்றாக்குறை நிலவுகின்றது. மேலும், தளபாட கட்டட நெருக்கடிகளும் உண்டு. இதை நீக்க முயற்சிப்பதுடன் க.பொ.த. உயர்தர வகுப்புக்களை இவ்வலயத்தில் தமிழ்மொழி மூலம் ஆரம்பிக்க வேண்டிய கட்டாய தேவையை செயற்படுத்தவும் உறுதி பூண்போம்.

கல்வியில் இணைப்பாட விதானச் செயற்பாடுகளானவை ஊக்குவிக்கப்படவேண்டியதும் வளர்க்கப்பட வேண்டியதும் தலையான கடமைகளாக எம் எதிரில் உள்ளன. கல்வியும் விளையாட்டும் பாடசாலை என்னும் நாணயத்தின் இரு முகங்கள். இப்பாடசாலை மைதானம் இன்றி இருப்பது நீண்டகாலமாக நோக்கில் மாணவரின் கல்விப் பூரணத்துவத்தை குறைபாடடையாதுச் செய்யும். இதன் நிமித்தம் விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்காக ஒரு நிரந்தர மைதானம் பெறும் முயற்சியில் இடையறாது முயற்சிப்போம் என உறுதி பூணுவோம்.

மேலும், பாடசாலையின் சமூகத் தொடர்புகட்காக பாடசாலைச் சமூகத்தை வலுவாக்குவது பாடசாலையால் சமூகமும் சமூகத்தால் பாடசாலையும் கூட்டிணைந்து வளர்ச்சிபெற வாய்ப்பளிக்கும். இதன்நோக்கில் தற்போது ஆரம்ப நிலையில் உள்ள பெற்றோர் சமூக உறவு, பாடசாலை அபிவிருத்திச் சங்க வலுவூட்டல், பழைய மாணவர் சங்கம் ஸ்தாபித்தும் வலுவூட்டி வளர்த்தலும் ஆகிய பணிகள் செய்யப்பட வேண்டிய காலத்தின் கட்டாய கடமைகளாகும். இவ்வமைப்புக்களை வளர்த்தெடுத்து மேம்படுத்த அனைவரும் உறுதி பூண்போம்.

**திரு. அ. மகேந்திரன்**
சிரேஷ்ட ஆசிரியர்

## சிந்தியுங்கள்:

1. முடியும் என்பது முன்னேறுபவரின் வார்த்தை.
   முடியாது என்பது முட்டாளின் வார்த்தை.
2. நம் வாழ்வில் கிடைக்கமுடியாத பெருஞ்செல்வம்,
   நாம் வீணே கழிக்கும் ஒவ்வொரு வினாடியும்தான்.
3. திட்டமிட்ட வாழ்க்கை, தெவிட்டாத வாழ்க்கை.
   திட்டமிடா வாழ்க்கை திடமில்லா வாழ்க்கை.

*திருமதி. J. J. ஸ்ரெலா*
*ஆசிரியை*

## நன்றி நவிலல்

- இற்றைவரை இவ்வித்தியாலயம் நிலைத்து நின்று தன் பணியில் முன்னோக்கிச் செல்ல நித்தம் எம்மை வழிநடத்திய எல்லாம் வல்ல இறைவனுக்கு

- இன்றைய நன்நாளில் இறைவனுக்கு நன்றிகூற எம்மோடு இணைந்த அனைவருக்கும், திருப்பலி நிறைவேற்றிய அருட்தந்தையருக்கும்

- பொன்விழாவிற்காகப் பாடசாலைக் கட்டிடத் திருத்த வேலைகளில் உதவிய பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளுக்கு

- வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கும், அங்கு ஆசிரியர்கள் தம் கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்கு அறிவுரைகள் வழங்கி, அனைத்து வழிகளிலும் கைகொடுத்து உதவும் மேல்மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுரக் கல்விப் பணிப்பாளர் உட்பட, மேலதிகக் கல்விப் பணிப்பாளர், அபிவிருத்தி, திட்டமிடல் பிரிவுகள், பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், நுகேகொட கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கும்

- எவ்வேளையிலும், எத்தேவையிலும், எமக்குப் பக்கபலமாக இருந்து உதவிகள் பல புரியும் கொழும்பு வலய, ஸ்ரீ ஜயவர்தனபுர வலய, ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்கும்

- 1957ம் ஆண்டு முதல் இற்றைவரை இவ்வித்தியாலயத்தில் கடமையாற்றிய, கடமையாற்று கின்ற அதிபர்கள், ஆசிரியர்கட்கு

- சகோதரப் பாடசாலைகளாக விளங்கும் இராஜகிரிய ஸ்ரீ ஹத சிங்கள வித்தியாலய அதிபர், ஆசிரியர்கட்கும், ஒபேசேகரபுர தமிழ் இந்து வித்தியாலய அதிபர் ஆசிரியர்கட்கும்.

- பொன்விழாவின் ஞாபகச் சின்னமாக, எமது பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு முக்கிய தேவையாக இருந்த ஒரு போட்டோ பிரதி இயந்திரத்தையும், ஒரு கணினியையும் தந்து உதவிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. தியாகராஜா மனேஸ்வரன் அவர்கட்கும்.

- எமது பாடசாலைச் சுற்றுமதிலைப் புனரமைப்புச் செய்து பாடசாலையின் பாதுகாப்பைப் பலப்படுத்திய 2006 மாநகரசபைத் தேர்தல் வேட்பாளர் திரு. அனுரடி சில்வா அவர்கட்கும்.

- பொன் விழாவிற்கான ஆசிச் செய்திகளையும், ஆக்கங்களையும் வழங்கிய அனைவருக்கும்

- பொன்விழா நினைவு மலரை ஒழுங்கு செய்து அச்சேற்றப் பண உதவி வழங்கிய அனைவருக்கும், அதனை திறம்பட அச்சிட்ட ரூபினா அச்சகத்தினருக்கும்

- பொன்விழாவிற்கான எமது அழைப்பை ஏற்று, இவ்விடம் சமூகம் தந்து விழாவைச் சிறப்பித்த பிரதம அதிதி அவர்கட்கும், சிறப்பு விருந்தினர்கள் - பிரமுகர்கள் அனைவருக்கும்

பொன்விழாக் குழுவினர்

பொன்விழா பொலிவுற
வாழ்த்துகின்றோம்



# SSA Computers

Software Solution Academy

***22-1/1, Galle Road, Dehiwala (Junction).***
***Tel: 0777-667747***

*Well Wishes From:*



# *Princess*

*A new intensity of fashion*

• Costume Jewelry • Fashion Watches • Consmetic and Gifts

**SOYSAPURA, MORATUWA,**
**SRI LANKA.**
Tel: 2610293
E-mail: princesstogo@hotmail.com

அன்னையின் தாள் பணிவோம்

# 50

## 1957 - 2007

# பொன் விழா

### தாயே.... நீ

| | |
|---|---|
| அன்பாய் | அரவணைத்தாய் |
| அறிவு விழி | திறந்தாய் |
| பண்பை எம்முள் | சுரந்தாய் |
| பாதை சிறக்க | வைத்தாய் |
| வல்லமையில் வாழ | வைத்தாய் |
| வந்தித்தோம் நின் | சேய்கள் |

பழைய மாணவர்கள்
மே/ஜய/இராஜகிரிய றோ.க.த.வி
இராஜகிரிய